# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 164 | வியாழக்கிழமை Thursday | 10.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# லண்டன் செல்லும் முதலமைச்சர் விஜய், நடிகர் அஜித்தை சந்திக்கிறாரா?



தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதல்-அமைச்சர் விஜய் 10-ந்தேதி முதல் 16-ந்தேதி வரை லண்டனில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார். இந்த பயணத் தின்போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன் னணி நிறுவனங்களின் தொழில் அதிபர்கள் மற்றும் முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளார்.

இந்த நிலையில், லண்டன் செல்லும் முதல்-அமைச்சர் விஜய், நடிகர் அஜித்குமார் பங்கேற்கும் கார் பந்தயத்தை நேரில் காண வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. லண்டனில் வருகிற 11, 12-ந்தேதிகளில் மிச்செலின் லீ மென்ஸ் கார்பந்தயம் நடைபெற இருக்கிறது. இதில் அஜித்குமார் அணி பங்கேற்கிறது. இதனால் லண்டனில் தனது நண்பர் அஜித்குமாரை முதல்-அமைச்சர் விஜய் சந்திக்க வாய்ப்புள்ளதாகவும், கார் பந்தயத்தை நேரில்பார்க்கவாய்ப்பிருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. சினிமாவில் பரம போட்டியாளர்களாக கருதப்பட்டாலும் விஜய் - அஜித் இடையே நல்ல நட்புறவு நிலவுகிறது. முதல்- அமைச்சர் விஜய்க்கு பல சந்தர்ப்பங்களில் அஜித்குமார் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டிருக் கிறார். சமீபத்தில் கூட சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் தமிழகத்தில் மோட் டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைக்கப்படும் என்ற விஜய்யின் அறிவிப்புக்கு. அஜித்குமார் நன்றியும், வாழ்த்தும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் போது 2036இல் 1.5 பில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு என்ற இலக்கை நிர்ணயத்து அதனை நோக்கி மிழக அரசு பயணித்து வருகிறது. அந்த வகையில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைத்த 100 நாட்களில் 104நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட்டு, சுமார் ஒரு லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் ஒரு லட்சத்து 21 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தமிழக அரசு சொல்லி உள்ளது. அதற்கு முன்னதாக தமிழக தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா தைவான் சென்று செமி கண்டக்டர்,ஏ.ஐ உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த நிறுவன ங்களை சந்தித்து பேச உள்ளதாக அதிகாரிகள் கூறினர். இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜயின் லண்டன் பயணம் தள்ளி வைக்கப்படலாம் என அரசுத் துறை வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

ஏற்கனவே சொன்னது போல 10 தேதி முதல் 15 ஆம் தேதி வரை முதல்வர் விஜய் இங்கிலாந்து செல்ல திட்டமிட்டு இருந்தார்.

இந்த நிலையில் அதில் சிறு மாற்றம் நடைபெற இருக்கிறது. 11ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை டெல்லியில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடக்கிறது. அதில் கலந்து கொள்ள வரும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் 11ஆம் தேதி தமிழகம் வருகிறார். அவரை சந்திப்பதற்காக முதலமைச்சர் விஜய் இங்கிலாந்து பயணத்தை தள்ளி வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

# தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல்: தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிவிப்பு



தாராபுரம், மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.மதுராந்தகம்தொகுதியில்திமுகசட்டத்துறை இணை செயலாளராக உள்ள பரந்தாமன் மற்றும் தாராபுரம் தொகுதியில் வழக்கறிஞர் சுகன்யாவும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பரந்தாமன், கடந்த தேர்தலில் சென்னை எழும்பூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ஆளும் தவெக இன்னும் வேட்பாளர் அறிவிக்கவில்லை. அதேபோல, அதிமுகவும் வேட்பாளர் அறிவிக்காத நிலையில், முதல் கட்சியாகதிமுகவேட்பாளரை அறிவித்துள்ளது. இடைத்தேர்தலில் தமிழகத்தில் பிரதானமாக உள்ள மூன்று கட்சிகளும் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளதால், தேர்தல் களம் அனல் பறக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் மதுராந்தகம் (தனி) தொகுதியில் தி.மு.க. சார்பில் அமுலு பொன்மலர் போட்டியிட்டார். அ.தி.மு.க. சார்பில் மரகதம் குமரவேல்,த.வெ.க.சார்பில் எழில் கேத்தரின், நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் ஆகியோர் போட்டியிட்டனர்.

மொத்தம் பதிவான 1 லட்சத்து 96 ஆயிரத்து 268 வாக்குகளில், அ.தி.மு.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 69,284 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில்,த.வெ.க.வேட்பாளர் எழில் கேத்தரின் 62,090 வாக்குகள் பெற்று 2-வது இடம்பிடித்தார். இருவருக்குமான வித்தியாசம் 7,194 வாக்குகள் ஆகும். தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலர் 59,838 வாக்குகள் பெற்று 3-வது இடம் பிடித்தார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஜானகி ராமன் 4,950 வாக்குகள் பெற்றார்.

தாராபுரம் (தனி) தொகுதி

தாராபுரம் (தனி) தொகுதியில் தி.மு.க. சார்பில் இந்திராணி, அ.தி.மு.க.சார்பில் சத்யபாமா, த.வெ.க. சார்பில் கவுரி சித்ரா, நாம் தமிழர் கட்சி சார்பில் திவ்யா ஆகியோர் போட்டியிட்டனர்.மொத்தம்பதிவான 1 லட்சத்து 99 ஆயிரத்து 944 வாக்குகளில், அ.தி.மு.க. வேட்பாளர் சத்யபாமா 81,100 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில்,தி.மு.க. வேட்பாளர் இந்திராணி 64,373 வாக்குகள் பெற்று 2-வது இடம்பிடித்தார். இருவருக்குமான வித்தியாசம் 16,727 வாக்குகள் ஆகும்.த.வெ.க. வேட்பாளர் கவுரி சித்ரா 46,438 வாக்குகள் பெற்று 3-வது இடம் பிடித்தார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் திவ்யா 6,026 வாக்குகள் பெற்றிருந்தார்.

கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் மதுராந்தம் (தனி) தொகுதியில் தி.மு.க. சார்பில் அமுலு பொன்மலர் போட்டியிட்டார். அ.தி.மு.க. சார்பில் மரகதம் குமரவேல்,த.வெ.க.சார்பில் எழில் கேத்தரின், நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் ஆகியோர் போட்டியிட்டனர்.

மொத்தம் பதிவான 1 லட்சத்து 96 ஆயிரத்து 268 வாக்குகளில், அ.தி.மு.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 69,284 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில்,த.வெ.க.வேட்பாளர் எழில் கேத்தரின் 62,090 வாக்குகள் பெற்று 2-வது இடம்பிடித்தார். இருவருக்குமான வித்தியாசம் 7,194 வாக்குகள் ஆகும். தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலர் 59,838 வாக்குகள் பெற்று 3-வது இடம் பிடித்தார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஜானகி ராமன் 4,950 வாக்குகள் பெற்றார்.

பறக்கும் படையினர்

மதுராந்தகம் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, தேர்தல் விதிமீறல்களை கண்காணிக்கும் வகையில் 9 பறக்கும் படையினர் மற்றும் 9 நிலையான கண்காணிப்பு குழுவினர் அமைக்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவதைத் தடுக்கும் வகையில் கண்காணிப்பு மற்றும் வாகனச் சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.


பொதுவாக தேர்தல் காலத்தில் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் எடுத்துச் சென்றால், அதற்குரிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும். அந்த நடைமுறை இடைத்தேர்தல் நடைபெறும் 2 தொகுதிகளிலும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1000 குறைந்தது: ஒரு வாரமாக வெள்ளி மாற்றமின்றி விற்பனை

சென்னை: தங்கம் விலை (செப்.9)பவுனுக்கு ரூ.1000 குறைந்தது. ஆனால்வெள்ளிவிலையில் ஒரு வாரமாக எவ்வித மாற்றமும் இல்லை.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு,தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையிலான மோதலின் தாக்கம் உலக பொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்க விற்பனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.



கடந்த மே மாதம் தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதோடு கடந்த 1-ம் தேதி நாட்டு மக்களிடம் தேவையின்றி தங்கம் வாங்காதீர்கள் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். இதையடுத்து தங்கம் விலை சந்தையில் ஏற்ற இறக்கத்துடன் விற்பனை ஆகிறது.

இன்றைய விலைவிவரம்: இந்தச் சூழலில் சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.125 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,145-க்கு விற்பனையாகிறது. பவுனுக்கு ரூ.1,000 குறைந்து, ஒருபவுன்ரூ.1,13,160-க்கு விற்பனையாகிறது.

24 காரட் தங்கம் ஒரு கிராம் ரூ.15,431-க்கும், ஒரு பவுன் ரூ.123,448-க்கும் விற்பனையாகிறது.

18 காரட் தங்கம் ஒரு கிராம் ரூ.11,915 -க்கும் ஒருபவுன்ரூ.95,320-க்கும் விற்பனையாகிறது.

ஒரு வாரமாக மாறாத வெள்ளி விலை:

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம்ரூ.255-க்கும்,கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,55,000-க்கும் விற்பனையாகிறது. கடந்த 3-ம் தேதியில் இருந்தே வெள்ளி விலை தொடர்ந்து கிராம் ரூ.255-க்கு விற்பனையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சந்தையில் அமெரிக்க டாலர் மதிப்பு வலுவடைந்துள்ளதாலும், அமெரிக்க பெடரல் ரிசர்வ் வட்டி விகிதக் குறைப்பு குறித்த அறிவிப்பை எதிர்நோக்கி முதலீட்டாளர்கள் காத்திருப்பதாலும், வெள்ளி விலை கடந்த ஒரு வாரமாக எவ்வித மாற்றமும் இன்றி நிலையாக உள்ளதாக சந்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குருப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt





ஈரோடு மாநகர் மாமரத்துப்பாளையத்தில் சிறப்பு குழந்தைகளுக்காக செயல்படும் “விண்ணில் சிறகடிக்கலாம்” அமைப்பிற்கு நேற்று (09.09.2026) அரிசி, எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அமைப்பின் நிர்வாகி சிவராணி அவர்களிடம் பொருட்கள் வழங்கப்பட்டன. “அறம் செய விரும்பு – கொடுத்து பழக வேண்டும்” என்ற உயரிய சிந்தனையை சமூகத்தில் விதைக்கும் சிறு முயற்சியாக இந்நிகழ்வு அமைந்தது. இம்முயற்சியை அண்ணாதுரை எனும் கௌசிகன் மற்றும் த.அ. சுபஸ்ரீ ஆகியோர் மேற்கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், துடுப்பதி, தனலட்சுமி மஹாலில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன் , ஆகியோர் நேற்று (9.9.2026) பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் மைதானத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2026ஐ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன் , ஆகியோர் நேற்று (9.9.2026) துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்யநாகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## விசிக நிர்வாகிகள் அறிமுக செயற்குழு கூட்டம்



கடலூர் மாவட்டம், விருத்தாசலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நல்லூர் மேற்கு ஒன்றிய விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் செயற்குழு கூட்டம் வேப்பூர் லேனா மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஒன்றிய செயலாளர் யா. முனுசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் மணிகண்டன், ரமேஷ், ஒன்றிய பொருளாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக தலைமை நிலைய பொறுப்பாளர் பெரம்பலூர் இரா.கிட்டு, மாவட்டச்செயலாளர் வீர.திராவிடமணி ஆகியோர் கலந்து கொண்டு, கட்சி நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். கூட்டத்தில், கட்சித் தலைவர் முனைவர் தொல். திருமாவளவனுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்க வேண்டும், விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், வேப்பூர் கூட்டுரோட்டில் மகளிர் சுகாதார வளாகம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் முகாம் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## இத்தாலி விமான நிலையத்தில் பயணியின் சூட்கேசில் காய்ந்த முதலைத்தலை



இத்தாலியின் புகழ்பெற்ற விமான நிலையம் ஒன்றில் பயணி ஒருவரின் சூட்கேசை அதிகாரிகள் சோதனையிட்டபோது, அதற்குள் காய்ந்த நிலையில் ஒரு ராட்சத முதலைத்தலைமறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலியின் வடக்கு நகரமான டுரின் பகுதியில் புகழ்பெற்ற காசெல்லே விமான நிலையம் அமைந்துள்ளது. அங்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) கோடைகாலக் கண்காணிப்பின் ஒரு பகுதியாக, இத்தாலிய நிதி போலீசாரும் சுங்கத்துறை அதிகாரிகளும் இணைந்து தீவிர சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் அமெரிக்காவின் மியாமி நகரிலிருந்து இஸ்தான்புல் வழியாக இத்தாலி வந்திறங்கிய இத்தாலிய பயணி ஒருவரின் உடைமைகளும் சோதனை செய்யப்பட்டது

. அப்போது, ராட்சத முதலையின் காய்ந்த தலை ஒன்று சாதாரண பரிசு காகிதத்தால் சுற்றப்பட்டு, சூட்கேசுக்குள் இருந்த துணிகளுக்கு நடுவே ரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

மேலும், விமான நிலைய பாதுகாப்பு வளையங்கள் மற்றும் ஸ்கேனர்களில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டது போலீசாருக்கு தெரியவந்தது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், துடுப்பதி, தனலட்சுமி மஹாலில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , நேற்று (9.9.2026) பொது மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2026ஐ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன்ஆகியோர்நேற்று(9.9.2026)துவக்கிவைத்தார்கள்.உடன்மாவட்டவிளையாட்டுஅலுவலர்திவ்யநாகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடியில் அன்னை வேளாங்கண்ணி மாதா கெபி 44ஆம் ஆண்டு திருவிழா

### பக்தர்கள் திரள ஆடம்பர கூட்டு திருப்பலி வெகு விமரிசையாக நடைபெற்றது



தூத்துக்குடி எஸ்.எஸ். மாணிக்கபுரம் அன்னை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா தங்கத்தேர் கெபியின் 44-ஆம் ஆண்டு திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி, பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுடன் விமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி தினமும் மாலை ஜெபமாலை மற்றும் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன. தொடர்ந்து அன்னையின் திருவுருவ சப்பர பவனி மற்றும் அசன விருந்தும் நடைபெற்றது.

விழாவின் இறுதி நாளில், தூய தோமையார் கல்விக்குழும தாளாளர் அருட்பணி. அமலன்தமியான்தலைமையில், தூய தோமையார் திருத்தூதர் ICSE பள்ளி முதல்வர் அருட்பணி. இன்பேன்ட், லூர்தம்மாள்புரம் லூர்து அன்னை ஆலய பங்குத்தந்தைஅருட்பணி.செல்வன் பெர்னான்டோ ஆகியோர் முன்னிலையில் ஆடம்பர திருவிழா சிறப்பு கூட்டு திருப்பலி நடைபெற்றது. இறைமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து கேக் வெட்டி அன்னை வேளாங்கண்ணி மாதா பிறந்தநாள் விழாவும் கொண்டாடப்பட்டது.

விழா ஏற்பாடுகளை தங்கத்தேர் கெபி கமிட்டி, புனித வேளாங்கண்ணி மாதா அன்பிய மக்கள் மற்றும் புனித பூண்டிமாதா அன்பிய மக்கள் இணைந்துசெய்திருந்தனர்.

## கரூர் அருகே பள்ளிப் பேருந்து மீது லாரி மோதி விபத்து: 16 மாணவர்கள், ஓட்டுநர் காயம்



கரூர் மாவட்டம் தரகம்பட்டி அருகே தனியார் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இன்று (செப்.9) காலை மாணவ, மாணவிகளை பள்ளிக்கு அழைத்து வருவதற்காகபள்ளிப்பேருந்து கிராமம், கிராமமாக சென்று மாணவ, மாணவிகளை ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது.

பாலவிடுதி செங்காட்டுப்பட்டி பகுதியில் மாணவ, மாணவிகளுடன் பள்ளி பேருந்து வந்து கொண்டிருந்தபோது அவ்வழியாக மாட்டுத் தீவனம்ஏற்றிசென்றலாரி, எதிர்பாராத விதமாக பள்ளிப் பேருந்து மீது மோதியதில் பள்ளி வாகனத்தின் முன்பக்கம் சேதமடைந்து கண்ணாடிகள் உடைந்தன.

இந்த விபத்தில் பேருந்து ஓட்டுநர் தாஸ் (31), மாணவிகள் 10பேர், 6 மாணவர்கள் என 17 பேர் காயமடைந்தனர். இதில் சிலருக்கு கால் முறிவு ஏற்பட்டுள்ளது. காயமடைந்த அனைவரும் மைலம்பட்டி அரசு மருத்துவனை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக, அனைவரும் திருச்சி மாவட்டம் மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தொடர்ந்து விபத்து குறித்து பாலவிடுதி போலீஸார், லாரி ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பெரியநெசலூர் பள்ளி மாணவர்களுக்கு இலவச விளையாட்டுச் சீருடை சொந்த செலவில் வழங்கிய தலைமை ஆசிரியர்



கடலூர் மாவட்டம் நல்லூர் ஊராட்சி ஒன்றியம் பெரியநெசலூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், பள்ளித் தலைமை ஆசிரியர் இரா.பத்மஸ்ரீ தனது சொந்த செலவில் இலவசமாக விளையாட்டுச் சீருடைகளை வழங்கினார். மாணவர்களின் விளையாட்டு ஆர்வத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்த சீருடைகளை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர். மாணவர்களின் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு, தனது சொந்த செலவில் சீருடைகள் வழங்கிய தலைமை ஆசிரியர் இரா. பத்மஸ்ரீயின் செயலுக்கு பெற்றோர்களும், பொதுமக்களும் பாராட்டு தெரிவித்தனர்.

## கன்னியாகுமரியில் நடைபெற்ற சர்வதேச வர்மா அடிமுறை போட்டி கற்பகம் பல்கலைக்கழக மாணவர்கள் பதக்கங்களை வென்று குவித்தனர்

### கோவை வந்த மாணவர்களுக்கு பாராட்டு




வர்மஅடிமுறை ஃபெடரேஷன் ஆப் இந்தியா சார்பாக, முதல், சர்வதேச அடிமுறை சாம்பியன்ஷிப் 2026 போட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்றது.. இதில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, உள்ளிட்ட நாடுகளிலிருந்து சுமார் 300-க்கும் மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள் பங்கு கொண்டனர். இதில் கற்பகம் பல்கலைகழக மாணவர்கள் கலந்து கொண்டு பதக்கங்களையும் கோப்பைகளையும் வென்றுள்ளனர். விஜயசந்தோஷ் வால்க்கேடைய ஜோடி, கத்தி ஜோடி மற்றும் சிரமக்கலைச் சண்டை பிரிவில் மூன்று தங்கப்பதக்கமும். ரித்தீஷ்மல்லு ஜோடி, குழுச்சுவடு மற்றும் கைச்சண்டை பிரிவில் மூன்று தங்கப்பதக்கம், லீலாதரன் வால் கேடையம் ஜோடி, கத்தி ஜோடி மற்றும்சிரமக்கலைசண்டை பிரிவில் இரண்டு தங்கமும் ஒரு வெள்ளிப்பதக்கம், கோகுல்ராஜ் கை போர், குழுச்சுவடு மற்றும் சிரமக்கலைச் சண்டை பிரிவில் மூன்று தங்க பதக்கம், மணிவாசகம் கைச் சுவடு, குழுச்சுவடு மற்றும் கைச்சண்டை பிரிவில் மூன்று தங்கபதக்கம்.பரத் கத்திச் சுவடு கைபோர் மற்றும் சிரமக்கலைச் சண்டை பிரிவில் மூன்று தங்க பதக்கம், கபிலன் வால் கேடையம் சுவடு, மல்லு மற்றும் கைச்சண்டை பிரிவில் இரண்டு தங்கமும் ஒரு வெள்ளிப்பதக்கம். சுதர்சன் சுருள் கேடயம் சுவடு, கைச்சண்டை மற்றும் சிரமக்கலைச் சண்டை பிரிவில் மூன்று தங்கப் பதக்கம், மொத்தம் 22 தங்கமும், 2 வெள்ளிபதக்கம்வென்று இந்தியாவிற்கு சிறப்பையும் பெருமையும் சேர்த்துள்ளனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு கற்பகம் பல்கலை தாளாளர் ராச வசந்தகுமார், முதன்மை செயல் அதிகாரி முருகையா, துணைவேந்தர் ரவி, பதிவாளர் பிரதீப், மற்றும் உடற்கல்வித்துறை இயக்குனர் சுதாகர் உள்ளிட்டோர் மாணவர்களை பாராட்டினர்.

## முன்னாள் மாணவருக்கு உற்சாக வரவேற்பு – நல்லாசிரியர் விருதாளருக்கு ஆசிரியர் தின விழாவில் பாராட்டு



இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், தாளிக்கால் சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் தின விழா மாணவர்கள் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவில் பள்ளியின் முன்னாள் மாணவரும், தமிழக அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதாளருமான திரு.பா. பாலமுருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நிகழ்ச்சியின் போது, 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவீத தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு, கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து மாணவர்களிடையே ஊக்கமூட்டும் சிறப்புரையாற்றிய அவர், கல்வியின் முக்கியத்துவம், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் மாணவர்கள் இலக்கை நோக்கி விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்துஎடுத்துரைத்தார்.

மேலும், தமிழக அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதைப் பெற்ற அவர், அந்த விருதினை தனது தாயாரின் திருக்கரங்களில் வைத்து ஆசி பெற்றுக் கொண்ட நெகிழ்ச்சியான நிகழ்வு அனைவரையும் உணர்ச்சிவசப்படச் செய்தது.

இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. சப்பி இளவரசன், பாராஞ்சி, ஆர்.கே. பேட்டை மற்றும் வீராணத்தூர் பகுதி குருசேகர ஆயர் பெருமக்கள், பள்ளி தாளாளர்கள் திரு. ஏ.எஸ். திருவழகன், திரு. ஜே.டி. தினகரன், திருமதி மேரி கற்பகம், பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் திரு. பிரின்ஸ் தேவாசீர்வாதம், பல்வேறு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கிராம பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு நல்லாசிரியர் விருதாளரை நினைவுப் பரிசுகள் வழங்கிபாராட்டினர்.



## விருத்தாசலத்தை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் அறிவிக்க வேண்டி நல்லூர் ஒன்றிய விசிக செயற்குழுவில் தீர்மானம்

கடலூர் மாவட்டம், வேப்பூரில் நல்லூர் மேற்கு ஒன்றிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தமிழகத்தில் பல மாவட்டங்கள் மற்றும் ஒன்றியங்களை நிர்வாக வசதிக்காக பிரித்து புதிய நிர்வாகிகளை அறிவித்து வருகிறார்

அதன்படி நல்லூர் மேற்கு ஒன்றிய புதிய நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் செயற்குழு கூட்டம் வேப்பூர் லேனா மண்டபத்தில் நடைபெற்றது

கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் முனுசாமி தலைமை தாங்கினார்

ஒன்றிய துணை செயலாளர்கள் மணிகண்டன், ரமேஷ், ஒன்றிய பொருளாளர் சிவா ஆகியோர் முன்னிலைவகித்தனர் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வீர. திராவிடமணி சிறப்புரை நிகழ்த்தினார் அப்போது தமிழக அரசாங்கம் கடலூர் மாவட்டத்தை இரண்டாக பிரித்து விருத்தாசலத்தை தலைமையிடமாக கொண்டு புதிய வருவாய் மாவட்டம் உருவாக்க வேண்டும் என்றும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்பிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து தீர்மானம் நிறைவேற்றினார் அதனை தொடர்ந்து விசிக தலைமை நிலைய பொறுப்பாளர் பெரம்பலூர் இரா. கிட்டு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இக்கூட்டத்தில் விருத்தாசலம் மாவட்டத்தின் மாவட்ட ஒன்றிய நகர முகாம் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

நல்லூர் மேற்கு ஒன்றிய புதிய நிர்வாகி களுக்கு செயற்குழுவில் அறிமுகபடுத்தி பொன்னாடை அணிவிக்கபட்டது

## டெலிபிசியோ நிறுவனம் சார்பாக ‘ஃபிசிவ்’ செயலி கோவையில் அறிமுகம் படுத்தப்பட்டது

### வீட்டிலிருந்தபடியே பிசியோதெரபி சிகிச்சை பெறும் புதிய வாய்ப்பு




கோவையில் டெலிபிசியோ நிறுவனம் சார்பாக நடைபெற்ற மூவ் எக்ஸ் எனும் பிசியோதெரபி தொழில்நுட்ப மாநாட்டில், வீட்டிலிருந்தபடியே பிசியோதெரபி சிகிச்சையைப் பெறுவதற்கான புதிய 'ஃபிசிவ்' செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. உலக பிசியோதெரபி தினத்தை முன்னிட்டு கோவையில் மூவ் எக்ஸ் எனும் சர்வதேசஅளவிலானமாநாடு மற்றும் அமர்வு நடைபெற்றது..

இதில் கோவை உட்பட உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பிசியோதெரபி துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு பிசியோதெரபி சிகிச்சையில் நவீன தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்..

டெலிபிசியோ நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் சி.இ.ஓ.இயன் முறை மருத்துவரான சந்தியா தலைமையில் நடைபெற்ற இதில், புனர் வாழ்வு சிகிச்சை துறை, இயன் முறை மருத்துவம் மற்றும் ஸ்டார்ட் அப் துறைசார்ந்தநிபுணர்கள், சுந்தர், குமரேஷ் பாபு, பிரதீபா, ஸ்டஃபோர்டு மிக்காயில், அஷ்மிதா நோரான்ஹா, காயத்ரி, நவீன் கிருஷ்ணா உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர்...

மாநாட்டின் ஒரு பகுதியாக டெலிபிசியோ நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான இயன் முறை மருத்துவர் சந்தியா ஃபிசிவ் செயலி எனும் புதிய செயலியை அறிமுகம் செய்து பேசினார்..

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பிசியோதெரபி சிகிச்சையை நோயாளிகளின் இருப்பிடத்திற்கே கொண்டு செல்லும் வகையில் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

குறிப்பாக ஏ.ஐ.தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஸ்மார்ட்போன் லேப்டாப் உதவியுடன் நோயாளிகளின் உடல் இயக்கங்களை கண்காணித்து, அவர்களுக்கு தேவையான பிசியோதெரபி பயிற்சிகளை நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளும் வகையில் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்..

முதியவர்கள், தொடர்ந்து மருத்துவமனைக்குச் செல்ல சிரமப்படுவோர், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தொடர் பிசியோதெரபி தேவைப்படுவோர் மற்றும் பணிச்சுமை காரணமாக நேரடியாக சிகிச்சை மையங்களுக்குச் செல்ல முடியாதவர்களுக்கு இந்த செயலி பயனுள்ளதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்...

பிசியோதெரபி சிகிச்சையை மருத்துவமனை மற்றும் சிகிச்சை மையங்களுடன் மட்டும் கட்டுப்படுத்தாமல், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மக்களின் வீடுகளுக்கே கொண்டு செல்லும் முயற்சியாக 'ஃபிசிவ்' செயலி சர்வதேச மருத்துவ நிபுணர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடதக்கது



நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகா பணகுடி பேரூராட்சி உட்பட்ட அண்ணா நகர் பகுதி மக்களுக்கு சுமார் 31 வருடத்திற்கு முன்பு 48 இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது அதனை பல வருடங்கள் ஆகியும் ஆன்லைனில் ஏற்றாததால் அப்பகுதி மக்கள் குடிநீர் மின் இணைப்பு வாங்க முடியாத சூழ்நிலையில் உள்ளனர் அப்பகுதி மக்கள் சார்பில் சமூக ஆர்வலரும் தினசங்கு நாளிதழ் செய்தியாளருமான பணகுடி அரிச்சந்திரன் திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.வித்யா அவர்களை நேரில் சந்தித்து மனு வழங்கினார்.

# திமுக கழக மறு சீரமைப்பு குறித்த ஆலோசனை செயற்குழுக் கூட்டம் தென்காசியில் நடைபெற்றது



திராவிட முன்னேற்ற கழக அமைப்புகளான மாவட்டம் நகரம் ஒன்றியம் கிளைக் கழகம் மற்றும் வார்டுகள் மறுசீரமைப்பது குறித்து தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசனைசெய்யப்பட்டது அது குறித்து கருத்து சொல்பவர்கள் 11ஆம் தேதி மாவட்ட கழக அலுவலகமான சிவந்தி நகர் கலைஞர் அறிவாலயத்தில் எழுத்துபூர்வமாகவழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம்,தென்காசி சிவா திருமண மண்டபத்தில்,தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வே. ஜெயபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பகுதி, நகரம், ஒன்றியம், பேரூர், வட்டம் மற்றும் கிளைக் கழகங்களின் அமைப்புகளை மறுசீரமைப்பது குறித்தும், மறுசீரமைப்பு தொடர்பான கருத்துகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளான முன்னாள் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஞானதிரவியம் மற்றும் கழக மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் திரு. வ.து.ந. ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு, கழக அமைப்புகளை மறுசீரமைப்பது தொடர்பான உரிய வழிகாட்டு நெறிமுறைகளை கழக நிர்வாகிகளுக்கு எடுத்துரைத்தனர்.

கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், அடிப்படை அளவில் கழகப் பணிகளைத் தீவிரப்படுத்தும் வகையிலும், மறுசீரமைப்புப் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைக்கதிரவன், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.ராசேந்திரன்,முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவபத்மநாதன் டாக்டர் செல்லதுரை மாவட்ட அவைத் தலைவர் எம் கே எஸ் எஸ் லிங்கம் பொருளாளர் ஷரீப்தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செங்கோட்டை எஸ்.எம். ரஹீம் ஆறுமுகசாமி நகரக் கழக செயலாளர் கடையநல்லூர் அப்பாஸ் இத்தாலியன் பீரப்பாசெங்கோட்டை வெங்கடேசன் தென்காசி சாதிர்ஒன்றிய கழகச் செயலாளர் சுரேஷ் அழகு சுந்தரம் கடையநல்லூர் முன்னாள் நகர கழக செயலாளர் முகமது அலி மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன் கடையநல்லூர் நகர மன்ற உறுப்பினர் சிட்டி திவான் மைதீன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஐவேந்திரன் தினேஷ் உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற ஒருங்கிணைந்த திருநெல்வேலி தென்காசி மாவட்ட தலைவர் ஈஸ்வரன் மாவட்டத் துணைச் செயலாளர் கென்னடி செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ரவிசங்கர் பூலாங்குடி சீதாராமன்மாநில பேச்சாளர் எம்என் இஸ்மாயில் உட்பட மாவட்ட செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# செங்கல் சூளைகளுக்கு லைசென்ஸ் குறித்து அமைச்சர் என்.ஆனந்திடம் எஸ்.கே.கிறிஸ்டோர் எம்.எல்.ஏ .மனு

நெல்லை மாவட்டம் பணகுடி.வள்ளியூர் பகுதிகளில் அமைந்துள்ள செங்கல் சூளைகளுக்கு லைசென்ஸ் பெறுவது மற்றும் புதுப்பிப்பது தொடர்பாக.நெல்லை தெற்கு மாவட்ட த.வெ.க செயலாளரும்.ராதாபுரம் எம்.எல்.ஏ.வுமான டாக்டர்எஸ்.கே.கிறிஸ்டோபர் சட்டப்பேரவையில் கேள்வி எழுப்பினார். இதைத்தொடர்ந்து த.வெ.க.பொதுச் செயலாளரும் அமைச்சருமான என்.ஆனந்தை நேரில் சந்தித்து.செங்கல்சூளை சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவையும் சமர்ப்பித்தார்.மேலும் ராதாபுரம் தொகுதியில் நடைபெற உள்ள உள்ளாட்சித் தேர்தலுக்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது குறித்தும்.ஒன்றிய மற்றும் பேரூர்கழகங்களை மறுசீரமைத்து உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கட்சியின் அமைப்புகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் த.வெ.க.பொதுச் செயலாளர் மற்றும் அமைச்சர் என்.ஆனந்துடன் கலந்து ஆலோசித்தார்.

# உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ஸ்டாண்ட் இல்லாமல் நோயாளிகளே குளுக்கோஸ் பாட்டிலை கையில் பிடித்தபடி சிகிச்சை பெரும் நிலை

## பொதுமக்களிடியே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது





கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் நோயாளிகளே குளுக்கோஸ் பாட்டிலை கையில் பிடித்துக்கொண்டு சிகிச்சைபெறும்அவலம் அரங்கேறியுள்ளது. இது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தினசரி 1500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்குவந்துசெல்லும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை - சேலம் - திருச்சி - மதுரை ஆகிய மையப்பகுதியில், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் விபத்தில் சிக்குபவ ர்களுக்கு முதல்கட்ட சிகிச்சை அளிக்கும் முக்கிய மருத்துவமனையாக உள்ளது. இதனால் எப்போதுமே கூட்டம் அலைமோதுகிறது.

நேற்று மாலை உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண்களுக்கு குளுக்கோஸ்ஏற்றப்பட்டது. அப்போது போதிய குளுக்கோஸ் ஸ்டாண்ட் இல்லாததால், நோயாளிகளே குளுக்கோஸ் பாட்டிலை கையில் தூக்கிப்பிடித்த படி படுத்திருந்தனர். சிலருக்கு உடன் வந்த உதவியாளர்கள் பாட்டிலைபிடித்துக்கொண்டிருந்தனர். கையில் பிடித்துக்கொண்டிருந்தபோது கை வலித்ததால் பாட்டிலை கீழே இறக்கியபோது, குளுக்கோஸ் இறங்காமல் இரத்தம் மேலே ஏறி பாட்டிலுக்குள்சென்றதால்நோயாளிகள் பதற்றமடைந்தனர். இதனை தொடர்ந்து மீண்டும் பாட்டிலை மேலேதூக்கிப்பிடித்தபடி குளுக்கோஸ் ஏற்றிக்கொண்டனர்.

தரம் உயர்த்தப்பட்ட அரசு மருத்துவமனை என்று கூறப்படும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் இத்தகைய அடிப்படை வசதி கூட இல்லாதது வேதனை அளிக்கிறது. நோயாளிகள் கையில் குளுக்கோஸ் பாட்டிலை பிடித்துக்கொண்டு சிகிச்சைபெறும்வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருவதால் பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.




# நெல்லை வண்ணார்பேட்டையில் எஸ்.சி. பட்டியல் வெளியேற்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

எஸ்.சி.பட்டியல் வெளியேற்ற கோரிக்கையை வலியுறுத்தி நெல்லை வண்ணார்பேட்டையில் தேவேந்திர சேனா சமூக பண்பாட்டு நிறுவனம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எழுத்தாளர் மோகன் தலைமை தாங்கினார் எழுத்தாளர் தமிழ்மாறன் கோரிக்கைகளை விளக்கி பேசினார் இந்த ஆர்ப்பாட்டத்தில் 1936 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தேவேந்திர குல வேளாளர் சமுதாயம் பட்டியலில் சேர்க்கப்பட்ட வரலாற்றுப் பிழையை சரி செய்து பட்டியலில் இருந்து வெளியேற்றி பி.சி. பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பேசினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் மணி பாண்டியன் யாபேஸ் பாண்டியன் துரைச்சாமி சுடலை பாண்டியன் சிவகுமார் கலந்து கொண்டனர். தொடர்ந்து அவர்கள் நீண்ட கால கோரிக்கையான ஏஸ்.சி. பட்டியலில் இருந்து வெளியேற்றும் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

# 5 orangutans' rescue in Odisha raises trafficking fears



*The state forest department is investigating the potential smuggling network, as these critically endangered species are often sought after in exotic pet trade.*

*Five orangutans, a critically endangered species native to the Indonesian and Malaysian rainforests, were found on Tuesday in a forested area in Ranakotha Badapahi in coastal Odisha's Balasore, prompting the state forest and wildlife department to investigate whether an international wildlife trafficking network was involved in smuggling them.*

*Orangutans are critically endangered species native to the Indonesian and Malaysian rainforests.*

*Orangutans are critically endangered species native to the Indonesian and Malaysian rainforests.*

*Orangutans are smuggled for high-end exotic pet trade, tourism entertainment, and private animal collections. An orangutan could fetch around 25 lakh. Principal chief conservator of forests (wildlife) Prem Kumar Jha said the orangutans, estimated to be between one and two years old, were found inside Ranakatha Protected Reserved Forest during routine patrolling around 6am. Jha said orangutans are found only in two to three places abroad. "The wildlife wing of the forest department is investigating how they came to Odisha," he said.*

*Jha added that police have been informed and a team from Nandankanan Zoological Park will take them. "Once the animals are brought to Nandankanan in Bhubaneswar, they will remain in quarantine before further decisions are taken about their care."*

*Orangutans are great apes and are not found in India. They have reddish-brown hair and are largely arboreal. Their name derives from Malay and Indonesian words meaning person of the forest.*

*Odisha forest minister Ganesh Ram Singh Khuntia said the discovery raised suspicions of wildlife trafficking. "An international mafia may be involved in trafficking them," Khuntia said. He added that an assistant chief conservator of forests will investigate.*

# "அரசுப் பள்ளி மாணவர்கள் என்றால் அவ்வளவு இளக்காரமா?" வானதி சீனிவாசன் காட்டம்



சென்னை: 'முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்காக கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கப்படும்வேளையில்,குறைந்தபட்சம் வாகன ஏற்பாடு கூட செய்யத் தவறியது முறையற்ற செயல். அரசுப் பள்ளி மாணவர்கள் என்றால் அவ்வளவு இளக்காரமாகப் போய்விட்டதா? என பாஜக மூத்த தலைவர் வானதி காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கள்ளக்குறிச்சி அருகே முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களை ஆபத்தான முறையில் ஏதோ சரக்குகளை ஏற்றிச் செல்வது போல் மினி லாரியில் ஏற்றி அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் செய்தி கடும் கண்டனத்துக்குரியது.

கடந்த சில நாட்களாகவே அதிக எண்ணிக்கையிலான விபத்து குறித்த செய்திகள் வந்த வண்ணம் உள்ள நிலையில் போக்குவரத்து விதிகளை மீறியும், மாணவர்களின் நலனின் மீதும் எந்த அக்கறையும் இன்றியும், ஆசிரியர்கள் துணையின்றி அழைத்துச் சென்றது அதிர்ச்சி அளிக்கிறது.

முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்காக கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கப்படும் வேளையில், குறைந்தபட்சம் வாகன ஏற்பாடு கூட முறையாக செய்யத் தவறியது முறையற்ற செயல். அரசுப் பள்ளி மாணவர்கள் என்றால் அவ்வளவு இளக்காரமாகப் போய்விட்டதா?

மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டும் முயற்சியின் பலனையே இத்தகைய சம்பவங்கள் சிதைப்பது கவலை அளிக்கும் செயலாகும். மாணவர்களை பாதுகாப்பாக வேன் அல்லது மினிபஸ் போன்ற வாகனத்தில் அழைத்துச் செல்லாமல் இதுபோன்று சரக்கு வாகனத்தில் பயணம் செய்ய அனுமதி கொடுத்தது யார்?

சரக்கு வாகனங்களில் பயணிகளை ஏற்றக் கூடாது என்ற அடிப்படைச் சட்டம் கூட அறிந்திருக்கவில்லையா?

இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பயணியர் வாகனங்களில் பாதுகாப்பாக மாணவர்களை அழைத்துச் செல்ல உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறையை வலியுறுத்துகிறேன்.

மேலும் மாணவர்களை சரக்கு வாகனத்தில் பயணம் செய்ய ஏற்பாடு செய்தவர்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.